**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 61/2021** **Date:05.08.2025**

**(PW1)- நாராயண பிள்ளை**

**1,2, 3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** எனக்கு உரிமைப்பட்ட சர்வே எண் 31/14 சொத்திற்கு வடக்கு பக்கம் சாலை உள்ளது என்றால் சரிதான். அதன் வழியாக தான் எனது வீட்டிற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 31/14 சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சாலையின் அகலம் 30 அடி என்றால் சரிதான். மேற்படி வடக்கு பக்கம் உள்ள சாலையிலிருந்து தான் என் சொத்திற்கு மின் இணைப்பும் தண்ணீர் இணைப்பும் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 30 அடி சாலையின் வழியாக எனது வீட்டிற்கு 4 சக்கர வாகனத்தை கொண்டு வரலாம் என்றால் சரியல்ல, சாலை வரை வரும், வீட்டிற்குள் வர முடியாது, தற்போது சாலையில் தான் வாகனத்தை நிறுத்துகிறேன்.

**2.** சர்வே எண் 31/26 சொத்து டிரஸ்டிற்கு உரிமைப்பட்ட சொத்து என்றாலும், நான் டிரஸ்டை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றாலும் சரிதான். டிரஸ்டின் சொத்திற்கு தெற்கு, மேற்கு பக்கம் 30 அடி ரோடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி 30 அடி ரோட்டின் மேற்கு பக்கம் புஷ்பா என்பவர் ஆக்கிரமித்து 2 மாடி கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு ஆக்கிரமித்து கட்டியுள்ளதால் டிரஸ்டிற்கு செல்லும் பாதை தடைப்பட்டது என்றால் சரியல்ல. புஷ்பா என்பவர் ஆக்கிரமித்து 2 மாடி கட்டிடம் கட்டியுள்ள இடம் தான் சர்வே எண் 31/26 ற்கு செல்லும் பாதை க்கான தடையென்று நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**3.** நீதிமன்ற ஆணையரிடம் வழக்கு அ மற்றும் பி பட்டிகை சொத்தின் இடைப்பட்ட பகுதியில் கேட் இருக்கும் விவரத்தை தெரிவித்தேனா என்றால் நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. வழக்கு அ மற்றும் B பட்டிகை சொத்திற்கும் இடையே கேட் இல்லாததால் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் கேட்டை குறிப்பிடவில்லைனயென்றால் சரியல்ல, கேட் உள்ளது. வழக்கு B பட்டிகை சொத்திற்கான சர்வே எண் 31/16 ன் உரிமையாளர் யார் என்றால் மீனா மற்றும் பலர் உள்ளனர்.

**4.** மேற்படி சர்வே எண் 31/16 சொத்திற்கான பட்டாவில் பிரதிவாதிகளின் பெயர் இல்லையென்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 31/16 சொத்திற்கான பட்டாவில் உள்ள நபர்களை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு B பட்டிகை சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதை குறிப்பிடவில்லையென்றால் நான் அறிக்கையை படிக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகையை பார்வையிடும் போது என்தரப்பில் யார் இருந்தார் என்றால் என்னுடைய வழக்கறிஞர் இருந்தார். பிரதிவாதிகள் தரப்பில் யார் இருந்தார் என்றால் அவரது வழக்கறிஞர் இருந்தார்.

**5.** சர்வே எண் 31/16 ல் பிரதிவாதிகளின் சொத்து இருப்பதை காட்ட எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். வழக்கு B பட்டிகை சொத்து சர்வே எண் 31/16 ற்குட்பட்ட பட்டா சொத்து என்றால் சரியல்ல, அது ஒரு வழிப்பாதை. மேற்படி வழக்கு B பட்டிகை சொத்து வழிப்பாதை என்பதை காட்ட அரசு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்யவில்லை. தற்போது வரை மேற்படி நிலம் அரசு வழிப்பாதை என்பதை காட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லையென்றால் சரிதான்.

**6.** சா்வே எண் 31/26 ற்கு தெற்கு பக்கம் உள்ள பாதை வழியாக மேற்படி சொத்தை சென்றடையலாம் என்றால் சரியல்ல, சுற்றிலும் எல்கை சுவா் உள்ளது. சா்வே எண் 31/26 சொத்தில் புஷ்பா என்பவா் ஆக்கிரமித்து வீடு கட்டியதை ஆட்சேபித்து அவா் மீது எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். சா்வே எண் 31/26 சொத்தை சுற்றியுள்ள காம்பவுண்ட் சுவா் டிரஸ்டால் கட்டப்பட்டது என்றால் சரிதான். டிரஸ்ட் மதில் மேல் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக டிரஸ்ட் சாா்பில் எவ்வித புகாரும் கொடுக்கப்படவில்லையென்றால் சரிதான்.

**7.** சா்வே எண் 31/14 ஐ தவிர சா்வே எண் 31/26 ல் எந்த வித உரிமை கிடையாது என்றால் சரியல்ல. நான் டிரஸ்டிற்கு தாவாசம்பந்தமாக எந்த வித புகாரும் எழுதவில்லையென்றால் சரிதான். நான் குறிப்பிடும் வழக்கு B பட்டிகை சொத்து பாதை கிடையாது என்றாலும் எந்த காலத்திலும் பாதையாக பயன்படுத்தப்படவில்லையென்றாலும் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள A and B பட்டிகை சொத்துகளை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ. 1 ஆவண வரைப்படத்தின் படி வழக்கு B பட்டிகை சொத்து சா்வே எண் 31/16 ற்கு உட்பட்டது என்றால் சரிதான். எனக்கு வழக்கு B பட்டிகை சொத்தின் மீது உரிமையில்லையென்றாலும் , உரிமையில்லாத சொத்தின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**8.** இந்த வழக்கை டிரஸ்டில் உள்ள பல நபா்களுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் Representative suit தொடா்பாக நீதிமன்றத்தில் அனுமதி பெறவில்லையென்றாலும், தினசரி நாளிதழில் எந்த

அறிவிப்பும் கொடுக்கவில்லையென்றாலும் சரிதான். எனவே என்னுடைய வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல, நான் வழிப்பாதைக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. வழக்கு B பட்டிகை சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்று வாதாடி விட்டு அரசை கட்சி சேர்க்கவில்லையென்றால் சரிதான். எனவே இந்த வழக்கு அவசிய கட்சிக்காரர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்